எண்ணிக்கை 10. ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் இயக்கப்படும் அரசுப் பேருந்துகள் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும், சுத்தம் செய்யப்படவேண்டும், நல்லமுறையில் மக்களுக்கு இயக்கப்பட வேண்டும் என்ற சீரிய சிந்தனையோடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2 ஆண்டுகளில் மட்டும் 68 போக்குவரத்துக் கழகப் பணிமனைகளை வழங்குவதற்கு உத்தரவிட்டு, அந்தப் பணிமனைகள் அமைப்பதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அவர் தொகுதியிலுள்ள பணிமனைக்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உரிய காலத்தில் அந்தப் பணி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் அந்தப் பணிமனை துவக்கி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண்.28, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

28—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***21670—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதியில் தற்போது தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியிலே தகவல் தொழில்நுட்பத் துறை மூலமாக ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2002 ஆம் ஆண்டு அரசு அறிவித்த தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையின்படி, சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும் என்பதற்கிணங்க, தமிழ்நாடு மின்னணு நிறுவனம், சென்னை–சோழிங்கநல்லூர், கோயம்புத்தூர்–விளாங்குறிச்சி, மதுரை–இலந்தைகுளம், மதுரை–வடபழஞ்சி, திருச்சி–நாவல்பட்டு, திருநெல்வேலி–கங்கைகொண்டான், சேலம்–ஜாகீர் அம்மாபாளையம், ஓசூர்–விஸ்வநாதபுரம் ஆகிய 8 இடங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாகியுள்ளன. மேலும், வேலூர் மற்றும் விழுப்புரத்திலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தகுந்த தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள தொழில்நுட்பவியல் பூங்காக்களில் பங்கேற்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் வந்தவாசி தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க வாய்ப்பு

இருப்பின், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய கருத்துரு பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, உரிய பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி, தெள்ளாறு ஊராட்சி ஒன்றியத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 386/மேய்க்கால் புறம்போக்கு நிலம் 145 ஏக்கர் அளவில் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்தமைக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

அரசு விழா

***34489—திரு. கடம்பூர் ராஜூ:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னர் திருமலை நாயக்கர் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,